T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-http://sond.lk/online/

Face book:- SOND
(https://www.facebook.com/sondngo?fre=ts )

# மாதாந்த அறிக்கை

சித்திரை, 2015

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

435/09 A,
Temple Road
Nallur, Jaffna

## இதழின் உள்ளே

1. யாழ்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

# யாழ்மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## விவசாயப் பண்ணை

பல்லப்பை இயற்கை விவசாய பண்ணையில் ஏற்கனவே பயிரிடப்பட்ட பயிர்கள் பராமிக்கப்படுவதோடு இம்மாதத்தில் பயிற்றை, பூசணி என்பன புதிதாக பயிரிடப்பட்டுள்ளன.

சேதன சான்றிதழ் வழங்குவது தொடர்பாக **Sricert** நிறுவன பணிப்பாளர் திலக் காரியவம்ச அவர்கள் பண்ணைக்கு வருகைதந்திருந்தார்.









விவசாயிகளுக்கான சேதன விவசாயம் தொடர்பான 2 நாள் பயிற்சி நெறி நடைபெற்றது. இதில் வளவாளராக பிள்ளை அவர்கள் கலந்துகொண்டார்.





## மிதிவெடி அபாயக்கல்விச் செயற்றிட்டம்

இம்மாதம் MRE செயற்பாட்டில் MRE பணியாளர்களினால் செயற்பாட்டுப் பிரதேசங்களில் 36 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 34 வெடிக்காத வெடிநிலையில் உள்ள வெடிபொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இம்முறை 36 தடைவைகள் சமூக மட்டத்தில் மக்களை சந்தித்திருந்ததனூடாக பணியாளர்களினால் 767 பேருக்கு மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வூட்டப்பட்டது.

செயற்பாட்டுப் பிரதேசங்களில் 13 MRE விழிப்புணர்வூட்டும் வெனர்கள் பொருத்தப்பட்டுள்ளது.

பளைவீமன்காமம் ,வளலாய் ,பலாலி, வஜாவிளான் ,பகுதிகளில் மக்களால் இனங்காட்டப்பட்டு எமது MRE பணியாளர்களினால் அடையாளப்படுத்தப்பட்ட வெடிக்காத வெடிநிலையிலுள்ள வெடிபொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது






SOND

## women photography பயிற்சி

இம்மாதம் 2015.04.21 – 22 ஆகிய 2 நாட்கள்கொண்ட **women photography** பயிற்சியானது யாழ்ப்பாணம் **MRTC** யிலுள்ள பயிற்சி மண்டபத்தில் **MRTC** மாணவர்கள் மற்றும் **NGO** பணியாளர்களுக்காக பயிற்றுவிப்பாளர்களான ஜனகன் மற்றும் சபேசன் அவர்களினால் நடத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு15 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

இப்பயிற்சியானது வளவாளர்களின் தெளிவுபடுத்தப்பட்டதுடன் செயன்முறைக்கற்கையும் இடம் பெற்றிருந்தது. இதற்கமைவாக நகரத்தின் பெண்கள் மற்றும் கிராமத்தில் பெண்கள் எனும் இரு தலைப்புகளிலும் பெண்களின் வாழ்க்கை நிலவரத்தினை **women photography** மூலம் வெளிக்கொண்டுவரும் வகையில் 22.04.2015 அன்று பிற்பகல் யாழ் நகரிலும் 28.04.2015 அன்று கிளிநொச்சிப் பகுதியிலுள்ள கரடிப்போக்கு எனும் கிராமத்திலும் படப்பிடிப்பு செயற்பாடுகள் மேற்கொண்டு 29.04.2015 அன்று பிடிக்கப்பட்ட படங்கள் யாவும் ஒழுங்கமைத்து கொடுக்கப்பட்டதுடன் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.





**“We all will Create a Better World”**

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.**
**(Create a Conducive Society for Good Environment for the Future).**

## Capacity building of Farmers and women societies And Exposure visits

செல்வாசாநகர் கிழக்கு மாதர் சங்கத்தவர்களுக்கு 02.04.2015 ம் திகதி ஆரையம்பதி AI உதவியுடன் மரக்கன்றுகளை நடும் முறை வீட்டுத்தோட்டம் அமைக்கும் முறை போன்ற விழிப்புணர்வூட்டும் நிகழ்வினை செய்திருந்தோம். அது போல் சேவுகப்பற்று கமநல அமைப்பு, குருந்தையடி கமநல அமைப்பு, சாமந்தியாறு கமநல அமைப்பு அங்கத்தவர்களை 30.04.2015 சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## Create an Agri based producer forum & Link with outside markets

முதற்கட்டமாக பட்டிப்பளை பிரதேச செயலகபிரிவுகளில் செய்வதற்காக அனைத்து உள்ளூர் உற்பத்தியாளர்களின் விபரங்களை தரும்படி பிரதேச செயலகத்தில் விவசாய உத்தியோகத்தரிடம் கோரப்பட்டது. அவற்றை தருவதாக கூறியிருக்கின்றார்கள். இயற்கை வழிமுறை விவசாயத்திற்காக கடந்த வருடம் பொருட்கள் கையளித்த விவசாயிகளுக்கு இவ் வருடம் பயிர் விதைகளை 07.04.2015ம் திகதி வழங்கி இருந்தோம்.

**“We all will Create a Better World”**

SOND

## அபிவிருத்தியில் அரசு சாரா பங்குதாரர்கள் (NSA) திட்டம்

இத்திட்டதின் கீழ் செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவில் 10 கிராமங்களில் கிராம மட்ட அமைப்புக்களை வலுப்படுத்துவதுடன் சன சமூக நிலையங்களை புனரமைத்து இவற்றின் செயற்பாடுகளை அதிகரித்து கிராம மட்ட அபிவிருத்தியினை தடையின்றி மேற்கொள்ள உதவுதல் எனும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.

செயற்திட்டம் தொடர்பாக செங்கலடிப் பிரதேசத்தில் உள்ள 6 கிராமங்களில் (மாவளையாறு, சர்வோதயநகர், மங்களகம, கரடியன்குளம், உறுகாமம், புல்லுமலை) இம்மாதத்தில் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு திட்டம் பற்றி விளக்கமளிக்கும் நோக்கில் இத் திட்டத்தின் நோக்கம், அதன் பங்குதாரர்கள், பயனாளிகள், செயற்பாடுகள், சன சமூக நிலையங்கள் அமைத்தல் போன்ற பல்வேறான விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் மாவளையாறு, சர்வோதயநகர், தளவாய், கொடுவாமடு, கரடியன்குளம், உறுகாமம், புல்லுமலை ஆகிய கிராமங்களில் சிவில் சமூக அமைப்புக்களுக்கான மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்ட செயற்பாட்டு விபரம்

## நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற் திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் செயற்றிட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண், 29 பெண் உள்ளடங்கலாக 50 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள். இம் மாதம் 3 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டபோது 42 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

காந்தி கழகத்தில் 04 புதிய சிறுவர்கள் இணைத்துள்ளார்கள்.

சிறுவர்களினால் இரண்டு நடமாடும் நூலக சேவை மேற்கொள்ளப்பட்ட போது 56 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கிரிக்கெட் வெட் ஆகிய விளையாட்டுப்பொருள் 05 தடவைகள் வழங்கப்பட்டது.



## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 11 தலைப்பில் 63 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

SOND


தொலைநோக்கு
"புதிய சமூகம் உருவாக்குவோம்"
பணிநோக்கு
சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.